எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த சட்ட முன்வடிவு 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

* மாண்புமிகு திரு கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

திரு. ச. அழகிரி: இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம். என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

6. மின்வாரிய நிதிநிலை அறிக்கை 1993–94 மற்றும் திருத்திய மதிப்பீடுகள் 1992-93 மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1993–94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை இம்மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென முன் மொழிகின்றேன்.

நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்கள் வசதிக்காக நூல் வடிவமாக இம்மன்றத்திலே வைத்திருக்கின்றேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை சபைக் குறிப்பில் ஏற்றிட அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை தமிழக அரசும், தமிழ்நாடு மின்சார வாரியமும் கருத்திற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மின்சார வாரியத்தின் பணியினை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களது கருத்தினை இம்மாமன்றத்தில் கூறிடுமாறு இந்த அவையின் மாண்புமிகு